




ஏப்ரல் 26

மாத இதழ்
50 காசு

FREE E BOOKS - www.thamizham.net - TM1889 / Dec 2010




FREE E BOOKS - www.thamizham.net - TM1889 / Dec 2010

# தகவல் தொடர்பு ஆண்டு!

1983ம் ஆண்டு அகில உலக செய்தித் தொடர்பு ஆண்டாக குறிப்பிடப் பட்டுள்ளது. விஞ்ஞான வளர்ச்சியினால் செய்தித் தொடர்பு எளிதாகி பல நாடுகளில் இருந்த இடத்திலேயே உலக நிகழ்ச்சிகளை அறிய, காண, கேட்க முடிகிறது இக்கட்டத்தில் தகவல் தொடர்பு வசதிகளை மனிதனின் அடிப்படை வசதிகளுள் ஒன்றாக கருதுவதில் தவறில்லை.

1979ம் ஆண்டு இந்தியாவின் ஜனத் தொகை 650 மில்லியனாக இருந்தபோது எடுத்த கணக்கின்படி 50 பேருக்கு ஒரு செய்தித் தாளும், 19 பேருக்கு ஒரு சஞ்சிகையும், 32 பேருக்கு ஒரு வானொலிப் பெட்டியும், 590 பேருக்கு ஒரு தொலைக் காட்சிப் பெட்டியும் தான் கிடைத்தது. அதிலும் ஏழைகளை விட பணக்காரர்களும், கிராமவாசிகளை விட நகரவாசிகளும், பெண்களை விட ஆண்களுமே இத்தகவல் தொடர்பு சாதனங்களை அதிகமாகப் பயன்படுத்துவதும் தெளிவாயிற்று.

நம் நாட்டின் மொத்த ஜனத்தொகையில் கணிசமான பங்கு வகிப்பது பெண்கள். செய்தித் தொடர்பு சாதனங்கள் இவர்களை எவ்வளவு தூரம் எட்டியுள்ளன என்று பார்த்தால் நகர்ப்புற பெண்களில் தவறாது வானொலி கேட்பவர்கள் 1/3 பங்கு, தினசரி படிப்பவர்கள் 1/5 பங்கு, மாதம் ஒரு முறை சினிமா பார்ப்பவர்கள் 1/3 பங்கு, 3% க்கும் குறைவானவர்களே தினமும் தொலைக் காட்சி பார்க்கின்றனர். கிராமப்புற பெண்களில் 80% ஒரு முறையாவது வானொலி கேட்டோ அல்லது சினிமா பார்த்தோ இருக்கிறார்கள். படித்த பெண்களில் 98% ஒருமுறையாவது செய்தித்தாள் படித்திருக்கின்றனர் இருப்பினும் 3.6% தான் தவறாது வானொலி கேட்பவர்கள், 1% தான் செய்தித்தாள் தினமும் படிக்கின்றனர். ஒரு சதவிகிதத்திற்கும் குறைவானவர்களே சஞ்சிகைகள் படிக்கின்றனர் அல்லது சினிமா பார்க்கின்றனர்.

நம் நாட்டின் பெருவாரியான மக்கள் ஏழைகள், கிராம வாசிகள், இந்த செய்தித் தொடர்பு ஆண்டிலாவது மக்கள் எல்லோரையும் இச்சாதனங்கள் உண்மையாகவே எட்ட வழி செய்ய அரசு முயலுமா?

—நி.அ.

நமது தேசிய கீதத்திற்கு மெட்டமைத்தது "ஹெர்பர்ட் ஜான் முரில்" என்ற ஆங்கிலேயன்.

விளம்பரம் மூலம் டி.வி க்கு 81-82 இல் ரூ 9.54 லட்சமும் உரிமக் கட்டணம் மூலம் ரூ 8 கோடி 82 லட்சமும் வருவாய். ஆனால் நமக்கு லாபம்?

தினமும் 1 வேளை உணவுடன் 10 கோடிக்கும் அதிகமான இந்தியர்கள் உறங்குகின்றனர்.

80% இந்தியர்கள் கிராமத்திலே! 80% டாக்டர்கள் நகரத்திலே!

உலகிலே அதிக கஞ்சா ஏற்றுமதி செய்யும் நாடு இந்தியா.

ஒரு இந்திய டாக்டரின் அமெரிக்க குடியேற்றத்தால் இந்தியா இழப்பது ரூ 3,30,000. அமெரிக்க அடைவது ரூ 51,70,000.

ஆண்டு தோறும் 1000 இந்திய டாக்டர்கள் வெளி நாடுகளில் குடியேறுகிறார்கள்.

இந்திரா 1980 க்குப்பின் 8 தடவை மந்திரி சபையை மாற்றி அமைத்திருக்கிறார்.

நம் மூவண்ண தேசியக் கொடியை அமைத்தவர் அன்னி பெசண்ட் அம்மையார்.

தமிழ்த் தட்டெழுத்துப் பொறியைக் கண்டு பிடித்தவர். சுந்தரம் ஐயர்; தஞ்சாவூர் காரர்.

"தண்ணீர்! தண்ணீர்!" படம் சோவியத் நாடெங்கும் திரையிடப்படவிருக்கிறது.

அம்பேத்கார் உலகின் தலை சிறந்த 6 மேதைகளில் ஒருவராக அங்கீகரிக்கப்பட்டார்.

FREE E BOOKS - www.thamizham.net - TM1889 / Dec 2010




ட்டி யின் பக்கங்களை நினைப்பூட்டும் மனிதனுடைய 32பற்கள் சரியாக இல்லா விட்டால் அதனால் ஏற்படும் தொல்லை தாங்க முடியாது. பல் சொத்தை, ஈறு வீக்கம், பயோரியா போன்ற விதத்தில் நோய் தாக்குகிறது. பற்கள் பாக்டீரியா போன்ற கிருமிகளால் தாக்கப்படும் போது, அது உடலின் பல உறுப்புகளையும் கூட பாதிக்க வாய்ப்பு உண்டு. பல் நோய்கள் பரம்பரையால் வருவதன்று. இளமையில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் பற்பாதுகாப்பை கவனித்தால் தெற்றுப்பல்லோ, பல் நோயோ ஏற்படாதிருக்கச் செய்யலாம். கீழ்வரும் வழிவகைகளைக் கடைபிடித்தால் எந்தப் பல்நோயும் வராமல் தடுக்கலாம்: -

1. கண்ட பொருள்களால் பல் தேய்க்காமல் நல்ல பற்பொடிகளால் அல்லது பற்பசையால் பற்களைத் தேய்க்க வேண்டும். வேம்பு, புன்கு கருவேலங்குச்சிகளினால் பற்களைத் துலக்குவது நல்லது.

2. உணவுக்கு முன்னும் பின்னும் வாயை நன்கு பல முறை கொப்பளிக்கவும். அதிகாலை எழுந்தவுடன் மட்டுமன்றி இரவு படுக்கச் செல்லும் முன்பும் பற்களைத் துலக்கவும்.

3. தெறிக்கும் பல்வலியும், சொத்தையும் குறைக்க உப்புத் தண்ணீரால் கொப்பளிக்க. மேலும் நாயுருவி வேரினால் அவ்வப்போது பல் துலக்கல் நல்லது. வாய் நாற்றத்தைப் போக்க நாயுருவிக் குச்சியை மென்று துப்பலாம்.

4. கிடைக்கும் போது கரிசலாங்கண்ணியை மென்று துப்புக. உணவாகவும், மருந்தாகவும் இருந்து வெங்காயம் பல்லை பாதுகாக்கும்.

—சுட்டி பாரதி

[அடுத்து: குடற்புண் (அல்சர்) வராமலிருக்க..]

**கட்சி விட்டு கட்சி மாறும் எம். எல். ஏக்களுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்?**

—சுஜாதாப்பிரியன், ஒன்னிபாளையம், கோவை-19

கட்சி மாறினால் எம். எல். ஏ பதவி ரத்தாகும் என்று கொண்டு வருவது சரியான சாட்டையடி!

**இன்றைய கல்லூரி மாணவர்களைப் பற்றிய உங்கள் பொதுவான கருத்து?**

—சி. சின்னக்கண்ணன், கோட்டூர், பொள்ளாச்சி

ஒரு நோய் பிடித்த சமுதாயத்தின், கல்வி முறையின் வெளிப்பாடுகளே இன்றைய சராசரி மாணவர்கள்!

**மக்கள் நடிகர்களின் அரசியல் கட்சிகளை ஆதரிப்பது ஏன்?**

—சுஜாதாப்ரியன், கோவை-19

மக்கள் ஆளுங்கட்சிகளை நம்பி சலித்திருக்கும் போது ஏதாவது மாற்று தேவைப் படுகிறது. இந்த வெற்றிடத்தை நடிகர்கள் திறமையாக பயன்படுத்தி விட்டார்கள். சரியான் மாற்று உதயமாகும் வரை நடிகர்கள் நாடாள்வார்கள்.




**மதம் என்பது மனிதனுக்கு எவ்வளவு தூரம் அவசியம் எனக் கருதுகிறீர்கள்?**

—மோ. விஜயகுமார், வாலிபாளையம், திருப்பூர்

மிருகமாக இருந்த மனிதனை ஒழுங்கு படுத்த வரலாற்றின் ஒரு காலக் கட்டத்தில் மதம் மிகவும் அவசியமாக இருந்தது இன்று மதத்தை விட மனிதனைக் கட்டுப்படுத்துகின்ற சக்திகள் உள்ளன.

**நடைமுறை வாழ்க்கையில் காதல் என்பதெல்லாம் சரிப்பட்டு வருமா?**

—கா. இராமச்சந்திரன், தி.நகர்-20

இது காதலர்களின் காதல் நிஜத்தைப் பொறுத்தது. ஆயிரக்கணக்கான காதலர்கள், திருமணம் செய்திருப்பதெல்லாம் நடைமுறை தானே! பொய்யில்லையே!

FREE E BOOKS - www.thamizham.net - TM1889 / Dec 2010

# பரிசுச் சீட்டு

இந்தியாவின் மொத்தப் பரிசு சீட்டு விற்பனை வருடத்திற்கு 250 கோடிக்கும் மேல். இந்திய ஜனத்தொகையை மனதில் கொண்டு பார்த்தால் ஒவ்வொரு இந்தியனும் சராசரி 4 சீட்டுகள் வாங்குகிறான்.

இதில் தமிழகத்தில் மட்டும் பரிசுசீட்டு விற்பனை 150 கோடிககுமேல். அப்படிப் பார்த்தால் ஒவ்வொரு தமிழனும் சராசரியாக வருடத்திற்கு 25 சீட்டுகள் வாங்குகிறான். பரிசு விழவில்லை என்றாலும் கவலைப்படாமல் தொடர்ந்து வாங்குகிறான். இப்படி எதையும் தாங்கும் இதயங்களைத் தமிழகத்திலே சமைத்த பெருமை 'அறிஞர்' அண்ணாவையே சேரும்.

மேகாலாயா, இமாச்சல, உ. பி., புதுவை, பூடான், பஞ்சாப் போன்ற பல மாநில பரிசுசீட்டுகளை மொத்தமாக குத்தகைக்கு எடுத்து அச்சிட்டு விற்பனை செய்வதே நம் தமிழகத்து ஆசாமிகள்தான். பூடான் மக்களுக்கு லாட்டரி சீட்டு என்றாலே என்னவென்று தெரியாதாம்! தமிழ்நாடு அரசு 7 பைசாவிற்கு அச்சடிக்கிற சீட்டை இவர்கள் 3 பைசாவிலேயே மிகவும் கவர்ச்சிகரமாக அச்சிடுகிறார்கள். அப்படி பார்க்கும் போது தமிழக அரசு இவர்களைவிட வருடத்திற்கு ரூ 19,20,000 அதிகமாக செலவிடுகிறது. மதுரைதான் இந்தியாவிலேயே அதிக பரிசு சீட்டுகள் விற்பனையாகும் மாநகரமாகும். புதுவையில் அமைச்சர்கள் பலர் லாட்டரி ஏஜென்ஸிக்குப் போட்டியிடுவதாகக் கேள்வி (ஏன், சாராய விற்பனை டல்லடிக்கிறதோ!)

நேர்மையாக உழைத்து(!) சம்பாதிப்பதைவிட குறுக்குவழியிலே சம்பாதிப்பது சுலபம் என்ற எண்ணத்தை மக்களிடம் பாரத அரசாங்கமே பரப்பிவருவது மிகவும் கேவலமானது. இந்த லாட்டரி ஏஜென்ஸிகள் மூலம் தனியார் நிறுவனங்கள் கொள்ளை லாபம் அடிக்கின்றன.

பகுத்தறிவு பாசறைகள் தமிழகத்தில் பல இருந்தும் அதிகம் பரிசுசீட்டு விற்பனையாகும் மாநிலமாக (அதிக மூடநம்பிக்கை உள்ள...?) தமிழகம் திகழ்வது அவமானப்படவேண்டிய விஷயம். அரசு பல்லவன் முதல் பட்டி தொட்டி வரை உழைப்பின் பெருமையை எழுதிவைத்து வள்ளுவனையும், உழைப்பையும் கேவலப்படுத்துவதையாவது தவிர்க்கலாமே!

—இரா முரளி

# ஜோதிடம் பார்க்கலாமா?

தமிழ்ப் பத்திரிகை உலகில் பி.வி. ராமனின் மீனம்; கலைப் பொன்னி (ஒவ்வொரு ராசிக்கும் ஒரு புத்தகம்). எதிர்கால விளக்கம், ஜோதிடக் கலைமணி சோதிடக் கடல், கடலங்குடி, ஜோதிட இன்பம், பால ஜோதிடம், சுபயோகம், நல்ல காலம் இப்படி ஏராளமான மாத வார தினப் பத்திரிகைகள் வந்து கொண்டிருக்கின்றன. வேறெந்த மொழியிலும், எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு எப்படி இங்கு மட்டும் ஏன் இப்படியொரு பூதாகர வளர்ச்சி வந்தது?

பகுத்தறிவு இயக்கங்கள் அதிகம் வேரூன்றியிருப்பதாகக் கருதப்படும் தமிழகத்தில் தான் ஜோதிடத்தில் மக்களுக்கு இருக்கும் கவர்ச்சி நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது! இந்த இயக்கங்கள் இன்னும் பொது மக்களிடம் சரியான திசையில் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தவேயில்லையோ என்று கூட ஐயம் எழுகிறது.

அறிவும், ஆராயும் திறமும் இல்லாத பாமரமக்களுக்கு வாழ்வில் நம்பிக்கை ஒளி ஊட்டுவ்தாகக காட்டி வெறும் வான சாஸ்திரத்தை வைத்தே வயிறு வளர்க்க முடியாதவர்கள் அதனை விரிவு செய்து பிழைப்பு நடத்துவதற்காக சோதிடம் தோன்றியிருக்கக் கூடும்

சோதிடத்தின் அடிப்படை வான சாஸ்திரம். வானில் உள்ள கிரகங்கள், நட்சத்திரங்கள் பூமியில் உள்ள ஒவ்வொரு பொருளின் மீதும் ஆதிக்கம் அல்லது பாதிப்பு கொண்டுள்ளன என்பதும் விஞ்ஞான உண்மை. அதற்கு மேலும் சென்று ஒருவன் பிறந்த நாளின் நட்சத்திரமும், கிரகமும் அவனது ஆயுள் முழுவதும் நன்மை தீமைகளை மாறி மாறி செய்து வருகின்றன என்பதெல்லாம் எந்த அளவுக்கு உண்மை? அறிவியல் அடிப்படையில் அமைந்த வான சாஸ்திரத்தைப் போலவே சோதிடத்தையும் பரிசோதனைக்கு உட்படுத்த சோதிட மாமணிகள் தயாரா? இதுவரை இது பற்றி நடத்தப்பட்ட பரிசோதனைகளின் அடிப்படையில் கண்டு பிடித்தது என்ன? அந்த உண்மைகள் தெளிவாகும் போதும் சோதிடம் பற்றி நாம் முடிவு செய்வோம்.

அதுவரை நம் தன்னம்பிக்கை மீதும், உழைப்பு மீதும் அவநம்பிக்கையை ஏற்படுத்தும் சோதிடத்திக்கு எல்லை மீறிய முக்கியத்துவம் கொடுப்பது சரியா?

—சுட்டி பார

FREE E BOOKS - www.thamizham.net - TM1889 / Dec 2010

கோவை மாவட்டம் பெரும் அளவில் லட்சாதிபதிகளை உரு-
வாக்குகிறது என்ற சிறப்பைப் பெற்றிருக்கிறது..........பெரும்
அளவில் அறிவாளிகளும் இந்த மாவட்டத்தில் தான் இருக்-
கிறார்கள் என்று நிரூபிக்க முயல்கிறது.........

**விஜயா பதிப்பகம்**

(அறிவுலக வாதிகளின் அட்சய பாத்திரம்)

தொலை பேசி:- 23214 6, ராஜ வீதி, கோவை-1

**புது அச்சகம் தொடங்குவோர் கவனிக்கவும்**

☐ சரியான வழிகாட்டுதலுடன், சிறந்த அச்சு எழுத்துக்கள், உபகரணங்கள் பெற மறவாமல் தொடர்பு கொள்க:—

**ரங்கா டைப் பௌண்ட்ரி**

அலுவலகம் : 73, ஹண்டர்ஸ் சாலை, வேப்பேரி, சென்னை.112.
தொழிலகம் : 38, குட்டி செட்டி தெரு, பெருமாள்பேட்டை, சென்னை-7
தொலைபேசி: 37999, 664293

**வெண் புள்ளிகள்**

சரீரத்தில் உண்டாகும் வெண்மை நிறப் புள்ளிகள் ஆரம்பத்தில் கவனிக்காமல் விட்டால் உடம்பெல்லாம் பரவி விடுகிறது. இதை வெண் மேகம், கொடிய சர்ம வியாதி என்று பயந்து விடுகிறார்கள். இது நிற பேதம் தான். நோய் என்று சொல்ல முடியாது. சரீரம் முழுவதும் பரவி இருந்தாலும் குணமாகி விடுகிறது.

எமது பிரதம வைத்தியர்

டாக்டர் R. சங்கரநாராயணன், B. A. B. L. அவர்களை சென்னையில் எமது கிளையில் 147, கச்சேரி வீதி, மைலாப்பூர் சென்னை—4, போன்: 74076, பிரதி மாதம் 8, 9, 10 (3 நாள்) சந்தித்து ஆலோசனை பெறலாம்.

**ஆனந்தா வைத்திய சாலை,**
புதுதாராபுரம் ரோடு, பழனி-624 601.

# குடிநீர்ப் பிரச்சனைக்கு இதோ தீர்வு

"மழை பொய்த்து விட்டது அதனால் தான் தண்ணீர் பஞ்சம். ஒரு நாள் விட்டு ஒரு நாள் தான் தண்ணீர் விட முடியும்" என்று இயற்கை மேல் பழியைத் தூக்கிப் போட்டு ஒதுங்கிக் கொள்ளுகிறது அரசாங்கம். இது எவ்வளவு கையாலாகாத்தனம் என்பதை ஐக்கிய நாட்டு நிபுணர் குழுவின் முடிவுகள் சொல்கின்றன.

ஊரி கோலாணி தலைமையிலான ஐக்கிய நாட்டு நிபுணர் குழு கடந்த 8 மாதங்களில் ஆரணி கோர்த்தலையாறு மற்றும பாலாறு பகுதிகளில் ஆய்வு நடத்தி கண்டுபிடித்தது இதுதான்:-

தற்சமயம் நம்மிடமுள்ள நிலமட்ட நிலத்தடி நீர்வளங்களை உருப்படியாகப் பயன்படுத்தினால் சென்னை நகரத்திற்கு தினம் 400 மில்லியன் லிட்டர் தண்ணீர் விநியோகிக்கலாம். தற்போது தினம் 230 லிட்டர் தான் வழங்கப்படுகிறது—அதுவும் பஞ்சகாலத்தில் ஒரு நாள் விட்டு ஒரு நாள் தான்!

மேற்கூறிய பகுதிகளில் கடலில் கலக்கும் நீரைத் தடுத்து மணலில் ஊறவைக்கும் முறையினைப் பயன்படுத்தி குடிநீராக வழங்கலாம். பருவ மழை இரண்டு ஆண்டுகளுக்கு தவறினாலும் கூட தினம் 180 மில்லியன் லிட்டர் வழங்க முடியும்.

சென்னையிலிருந்து 50 கி. மீ தூரத்திலிருக்கும் பழவேற்காடு ஏரியில் (புழலேரியை விட 6 ச. மைல் பெரியது) கடலிலிருந்து வரும் நீரை (back water) 150 மீட்டர் சுவர் மூலம் தடுத்து சுற்றுப் புறத்திலுள்ள நீரில் உப்புச் சத்தினை வெளியேற்றி சென்னைக்குக் கொண்டு வந்து குடிநீர் பிரச்சனைக்குத் தீர்வு காண ரூ 10 கோடி தான் செலவாகும்.

கையிலே நல்ல வெண்ணெய் போல இந்தத் திட்டங்கள் இருக்க, பல கோடி பணத்தை ஏப்பம் விடும் கிருஷ்ணா நதி நீர் திட்டத்தை மேற்கொள்ள முடிவெடுத்தது ஏன்? அதுவும் அந்நிய மாநில தயவை எதிர் நோக்கி!

லஞ்சலாவண்யம், இடைத்தரகு காண்ட்ராக்ட் இவற்றின் வாயிலாக கோடிக்கணக்கில் மக்கள் பணத்தை ஏப்பமிடும் இன்னொரு வீராணத்திற்கு அரசு வழி வகுக்கிறதா?

—கார்த்திக

FREE E BOOKS - www.thamizham.net - TM1889 / Dec 2010

FREE E BOOKS - www.thamizham.net - TM1889 / Dec 2010

## உண்மை நிகழ்ச்சி: சில்லறை விஷயம்

திண்டிவனம் பேருந்து நிலையத்தில் சென்னை செல்லும் பேருந்து ஒன்று வந்து நின்றது, கண்டக்டரிடம்!

'சார் ..மெட்றாஸ்... ஒரு டிக்கெட்' என்றேன்.

'ஏழு ரூபாய் ஐந்து பைசா கொடுப்பா' என்றார் அந்த கண்டக்டர்.

என்னிடம் ஐந்து பைசா இல்லை, எனவே ஏழு ரூபாயும் இருபத்தைந்து பைசாவையும் எடுத்துக் கொடுத்தேன்...

'ஐந்து பைசாவா இல்லையா' என்று முனகியவாரே பைக்குள் போட்டுக் கொண்டு டிக்கெட் எழுதிக் கொடுத்தார். மீதி இருபது பைசா தருவார் என்று சற்று நேரம் நின்றேன். அவர் என்பக்கமே திரும்பாமல் மற்றவர்க்கு டிக்கட் போட்டுக் கிழித்துக் கொண்டிருந்தார்... இதே சில்லரைத் தகறாறுடன்.

வெயில் உக்கிரமாக இருந்தபடியால் சற்று நின்று பார்த்துவிட்டு, இருபது பைசா தானே உள்ளே வந்து தருவார் என்று எண்ணி வண்டியினுள் ஏறி அமர்ந்து கொண்டேன்.

சற்று நேரத்தில் வண்டியும் புறப்பட்டது. ஏகப்பட்ட கூட்டம் இந்த நெருக்கடியில் இந்த இருபது பைசாவைப் போய் எப்படிக் கேட்பது என்று பேசாமலேயிருந்து விட்டேன். இறங்கும்போது வாங்கிக்கொள்ளலாம் என்ற எண்ணம். கேட்பதற்கு ஒரு வித வெட்கம்.

பிராட்வே பஸ் நிலையம், வண்டி நின்றது, எல்லோரும் இறங்க ஆரம்பித்தனர். எல்லோருக்கும் முன்பு கண்டக்டர் இறங்கி கீழே நின்று விட்டார். நம்மைப் பார்த்தாலாவது தரமாட்டாரா என்று எண்ணமிட்டவாரே அவர் முகத்தில் படும்படியாக பின் பக்கமாக இறங்கினேன். ஹூஹூம் கண்டுக்கவேயில்லை. விடவும் மனசில்லை,

oooooo

கேட்பதற்கும் வெட்கம். சிறிதே நான் நகர, என் பின்னாலேயே இறங்கிய ஒரு வயதான கிராமத்து அம்மாள்,

'ஐயே, மீதி ஐந்து பைசா கொடுக்கலியே' என்றாள் கண்டக்டரிடம்.

'ஏம்மா பெரிசா அஞ்சு பைசாவே கேட்க வந்திட்டியா... அஞ்சு பைசா' என்றார் இளக்காரத்தொனியில், சற்று வேகத்துடன் அந்த அம்மாள்

'பெரிசா அஞ்சு பைசாங்கிறீயே, ஏம்பா அத்த வாங்காமதான் டிக்கெட் போடறது. பத்து பைசாவா வாங்கி உள்ளார போட்டுக்கிட்டுத்தானே டிக்கட்ட கிழிச்சே இப்ப பெரிசா அஞ்சு பைசாங்கிற அந்த மீதி அஞ்சு காசுக்கு வீங்கிப் போய்த்தானே கேட்டாக்க பாத்துக்கலாம்னு கம்னு கீழே இறங்கினே எடுப்பா காச' என்றாள் விடாமல்.

கோபம் கொண்ட கண்டக்டர்,

'இந்தா கெயவி அஞ்சு பைசாவைக் கொண்டாந்து கொடுத்துப்புட்டு உன் பத்து பைசாவை வாங்கிட்டுபோ' என்றார்.

'இன்னாப்பா வெளையாடறியா?' உன் பையை இப்படிக்காட்டு, எத்தினி அஞ்சு பைசாவே எடுக்கிறேன் இப்போ. பொண்டாட்டிக்கு பூ வாங்கனுமின்னா சொல்லிக் கேளு ஒரு அம்பது பைசாவா தாரேன். அத்த விட்டு அஞ்சு பைசா பத்து பைசாவா கௌரவமா பிச்சையெடுக்கிற. கவர்மெண்ட்ல சம்பளம் வாங்கலே?' இன்னும் என்னென்னவோ மொலு மொலுவென்று அந்த அம்மாள் பேசப்போக ஒரு கூட்டம் சேர்வதைக் கண்ட கண்டக்டர் உடனே அஞ்சு பைசாவை எடுத்துக் கொடுக்க

எனக்கு வெட்கமாக இருந்தது! இந்த எனது பேண்டும், சட்டையும் போட்டிருந்ததினால் ஏற்பட்ட போலி கவுரவத்தை எண்ணி! அந்த வயதான அம்மாளிடமிருந்த ஒரு தன்னம்பிக்கை என் போன்ற எத்தனையோ பேரிடம் இல்லையே!

—சாயி



# பசுமைப்புரட்சி இரசாயனம்



மிக்சாடால் பயன் படுத்திய நெற்கதிரும் (வலது) பயன்படுத்தாத நெற்கதிரும் (இடது)

கடந்த 30 ஆண்டுகளில் இரு மடங்கு நிலம் விவசாயத்தில் ஈடுபடுத்தப் பட்டென்ன! ஏராளமான செயர்கை உரங்-களைக் கொட்டிக் குவித்தென்ன! இன்னும் நமது தேவையை விட உணவு உற்பத்தி குறைவாகத் தானே இருக்கிறது.

உணவு உற்பத்தியை இப்போது இருப்பதை விட இன்னும் பல மடங்கு பெருக்க வழி கண்டு பிடிக்கக் கூடாதா?

சூரிய ஒளியிலிருந்து தாவரங்கள் சக்தியைப் பெற்று இரசாயன சக்தியாக மாற்றி ஒளிச் சேர்க்கை மூலம் தங்கள் உணவைச் சேகரிக்கின்றன. சூரிய ஒளியை அவை உணவாக்கும் திறனை அதிகப் படுத் தினால் உற்பத்தியும் அதிகரிக்குமல்லவா? தாவரத்திற்குத் தேவையான கரியமலவாயு ண் இவற்றை சிறப்பாக்கித்தருவதை விட ஒளிச்சேர்க்கை திறனை உயர்த்த முயன்-றால் என்ன?

இந்த சிந்தனையின் அடிப்படையில் இந்துஸ்தான் லீவரின் ஆய்வு மையம், (அந்தேரி, பம்பாய்) மிக்சாடலால் என்ற இரசாயனப் பொ-ருளை உருவாக்கி யிருக்கிறார்கள்.

இந்தத் திரவத்தைத் தாவரங்களின் மேல் தெளித்தால் அவை சூரிய ஒளியைக் கிரகித்து அதிகமான கார்போ ஹைட்-ரேட்டை உருவாக்கும் சக்தி பெருகுகிறது. ஒன்றுக்கு ஒரு மில்லியன் என்ற விகிதத்தில் மிக்சாடலால்பயன்படுத்தினால் போதும்.50,000 ஹெக்டர் நிலப்பரப்பில் இதனை பரிசோதனை செய்து பார்த்திருக்கிறார்கள். ஒவ்வொரு தாவரத்திலும் இது முழு வெற்றி பெற்றிருக்கிறது. நெல், கோதுமையில் 15% லிருந்து 25% வரை உற்பத்தி பெருகியிருக்கிறது. சில காய்கறி களைப் பொறுத்தவரை 60% உற்பத்தி உயர்ந்திருக்கறது.

நாட்டின் ஒவ்வொரு விவசாயியும் வாங்குமளவுக்கு இது விலை மலிவாகவும் இருக்கும்

—இ. ஜே. கந்தா

# சேர இராணுவத்தில் ரூ.4000

இராணுவத்திற்கு ஆள் எடுக்கும் அலுவலகங்கள் நாட்டில் 60 இடங்களில் உள்ளன. ஓர் ஆண்டிற்கு சுமார் 60,000 பேரைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

இந்தியாவிலேயே அதிக நபர்களை இராணுவத்தில் தேர்வு செய்யும் இடம் மத்திய பிரதேசத்தின் ரோஹ்டக் மாவட்டத்தில் உள்ள ஜெய்ஹார். இந்த மாவட்டத்திலும், சுற்று வட்டாரங்க-ளிலும் மட்டும் ஆண்டுக்கு 15,000 பேர் தேர்வு செய்யப்படுகின்-றனர். கடந்த 75 ஆண்டுகளாக, வறுமையை விரட்ட, இராணு வத்திற்குப் போவதே ஒரே வாழ்க்கையாக இங்குள்ளவர்களுக்கு அமைந்திருக்கிறது. சாதாரண "ஜவான்"க்கு எம்.ஏ. படித்தவர் கள் கூட மனுப்போடுவது இங்கு சாதாரணம்.

லஞ்சம் தராமல் இங்கிருந்து இராணுவத்தில் சேருவது நடக்காத காரியம் எனக் கருதப்படுகிறது. தற்போதைய 'ரேட்' இதற்கு ரூ 4000 முதல் ரூ 5000 வரை. இதனை முன்னாள் மிலிட் ரிக்காரர்களும், தரகர்களும் சேர்ந்த குழு வசூலிக்கிறதாம். இந்த லஞ்சக் குழு ஆண்டுக்கு ரூ 60 லட்சம் வரை வசூல் செய் கிறதாம். இந்த விவகாரத்தை வெளிக் கொணர அத்தாட்சி காட்ட முடிவதில்லை. காரணம் வசூலிப்பது மிகவும் திறமை யாக கையாளப்படுகிறது. பிரபலமான தரகர்கள் வேலை கிடைக்காத பட்சத்தில் பணத்தைத் திருப்பித் தரவும் செய்வதால் இது நம்பிக்கையுடன் நடக்கிறது. பணம் கொடுத்து விட்டு 2,3 ஆண்டுகள் கூடக் காத்திருக்கிறார்கள் கிராம வாசிகள்.

சில போலிதரகர்கள் நூதன மோசடி செய்கிறார்கள். அதாவது 20 பேரிடம் தலைக்கு ரூ 3000 வீதம் (வேலை கிடைக் கா விட்டால் பணம் ரிபண்டு!) வாங்குவது. இதில் 3 பேருக்குத் தானாகவே வேலை கிடைத்து விடும். வேலை கிடைக்காத 17 பேருக்குப் பணத்தைத் திருப்பிக் கொடுத்தாலும் அவர்களுக்கு ரூ 9000 நிற்கிறது.

15 ஆண்டுகளாக தொடரும் இந்த லஞ்ச விவகாரம் பற்றி தேர்வு இயக்குநர் மேஜர் ஜெனரல் இ. எ. ஜோசப் கூறுகிறார். "90% புகார்கள் ஆதாரமற்றவை. ஒரு சில ஊழல்கள் நடந்தி ருக்கலாம். தவறு நடந்ததாக கண்டு பிடிக்கப் பட்டால் கடுமை யான நடவடிக்கை எடுக்கிறோம்:"

—ஸ்டேட்ஸ்மேன்

FREE E BOOKS - www.thamizham.net - TM1889 / Dec 2010

### நெல்லை பேருந்து நிலையத்தில்

☐ திருநெல்வேலி மத்திய பேருந்து நிலையத்தில் 9,33ம் நம்பர் பேருந்துகள் நிற்குமிடத்தில் உள்ள பயணிகள் அமரும் இடத்தில் தற்போது கடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது பயணிகளுக்கு பெரும் பிரச்சனையாக அமைந்துள்ளது. வெயில் காலத்தில் பயணிகள் நிழலில் ஒதுங்கினால் கூட கடை முதலாளிகள் முணு முணுக்கின்றனர். பேருந்து நிலைய கண்காணிப்பாளரும், கமிஷனரும் பயணிகள் அமரும் இடத்தில் கடைகளை ஏற்படுத்த எப்படி இசைந்தார்கள் என்பது புதிராக உள்ளது.

—நாஞ்சை சந்திரா

## வாசகர் குமுறல்

### ஆடு, மாடுகளோடு மாணவர்கள்

☐ அரும்பாக்கம் மாநகராட்சிப் பள்ளி, சுமார் 1000க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிலும் ஓர் நடுநிலைப் பள்ளி. இப்பள்ளியில் மாணவர்களுக் கென்று ஒழுங்கான கழிப்பறை கிடையாது. அதனால் தானோ என்னவோ பொது மக்கள் எல்லோருமே இப்பள்ளியின் சுற்றுப்புறத்தை பொதுக் கழிப்பிடமாகப் பயன்படுத்துகிறார்கள். மேலும் பொறுப்பற்ற பொது ஜனங்கள் இந்தப் பள்ளியைப் பொதுப் பாதையாகவும் பயன்படுத்தத் தொடங்கி விட்டார்கள். பல பொழுது பக்கத்திலுள்ள மரத்தடியில் 'வகுப்புகள்' தஞ்சம் புகுவதால் ஆடும் மாடும் கூட இவர்களோடு 'சகோதரத்துவம்' பேசுகிறது. அரசு நடத்தும் பள்ளிகளில் கல்வித்தரம் தான் தாழ்ந்திருக்கிறது என்றால் சுகாதாரமும் கூடவா?

—சி. இரகுராமன், சென்னை-106

### கழிப்பிடமில்லா திருப்பரங்குன்றம்

☐ அறுபடை வீடுகளுள் 'முதற்படை' வீடான திருப்பரங்குன்றம் கோவில் இந்தியாவிலுள்ள பிரசித்தி பெற்ற கோவில்களுள் ஒன்று. இங்கு பால் குடம், பங்குனி உத்திரம் போன்ற விசேட நாட்களில் ஏராளமான வெளியூர், வெளி நாட்டு பயணிகள் வந்து தரிசித்து செல்வார். இந்த ஊரில் பொதுக் கழிப்பிடம் இல்லாதது ஒரு பெருங்குறையாக உள்ளது. வெளியூர் பயணிகளுக்கு மட்டுமின்றி இவ்வூர்மக்களுக்கும் கழிப்பிடம் அவசர தேவையாக உள்ளது. இவ்வூர் மககள் இரவு நேரங்களில் காடு, பொட்டல் வெளிகளுக்கு மலம் கழிக்க செல்கின்றனர். இது பற்றி பேரூராட்சி ஆணையரிடமும் தேவஸ்தான அதிகாரியிடமும் பலமுறை எடுத்துச் சொல்லியும் செவிடன் காதில் சங்கு ஊதிய கதையாக ஆகி விட்டது.

—ஓ. எஸ். பாலகிருஷ்ணன், திருப்பரங்குன்றம், மதுரை.5

### வேலை வாய்ப்பு அலுவலகத்தில்

☐ "இரும்படிக்கின்ற இடத்தில் ஈக்கு என்ன வேலை?" என்ற கூற்றைப் போல நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பு அலுவலகத்தில் என்ன வேலை?

"காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை எந்த நேரத்திலும் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் உதவி இயக்குநரைச் சந்திக்கலாம்" கோவை மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் காணப்படும் அறிவிப்பு இது.

இவர்கள் எதற்கு வேலை வாய்ப்பு அலுவலகத்தின் உதவி இயக்குநரைச் சந்திக்க வேண்டும்? தங்கள் பெயரை வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து விட்டு ஆண்டுக்கணக்கில் காத்திருப்பவரின் நிலைக்கு காரணம் இப்போது தானே புரிகிறது! வேலை வாய்ப்பு அலுவலகங்களாவது? மண்ணாங்கட்டியாவது!

—என்: ரங்கசாமி, கோப்பனூர் புதூர்

### அரசியல் வாதிகளுக்குத் தண்ணீர் பஞ்சமில்லை!

☐ தண்ணீர் பஞ்சத்தால் தமிழ் நாடே தவிப்பாய்த் தவிக்கிறது. இதற்கென்றே பள்ளிக் கூடங்களை சீக்கிரம் சீக்கிரமாய் மூடப்போகிற நிலையில் இருக்கும் இந்த நேரத்தில் மதுரையில் மட்டும் தண்ணீருக்குப் பஞ்சமில்லை, அதாவது பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரிகளுக்கும் எம்.எல்.ஏக்களுக்கும் மற்றும் கட்சிப் பிரமுகர்களுக்கும். இவர்களுக்கென்று தினமும் மதுரை மாநகராட்சி லாரிகளில் தண்ணீர் வந்து கொட்டுகிறது. இதை யாரும் கேட்பாரில்லை, கவனிப்பாரில்லை இவ்வளவு ஏன், காமராஜ் காங்கிரஸ் கட்சித் தலைவரான பி. நெடுமாறன் வீடு இருக்கும் ஷெனாய் நகரில் தினமும் ஒரு லாரி தண்ணீர் வந்து இறங்குகிறது. மக்களுக்குப் போகத்தான் மந்திரிகளுக்கு என்று கேள்விப் பட்டிருக்கிறோம். இப்போது மந்திரிகளுக்குப் போகத்தான் மக்களுக்கு என்பதைக் கண்கூடாகப் பார்க்கிறோம்.

—செல்வி எஸ். கங்கா, மதுரை.50

FREE E BOOKS - www.thamizham.net - TM1889 / Dec 2010








**சம்பள தினம்**

விட்டில்
இருப்பவர்களைச்
சிரிக்க
வைத்து விட்டு
கலைந்து
பிரிந்து
தனியே
கண்ணீர்
சிந்தாமல்
அழும் நாள்

—சி. ஆர். ரவீந்திரன்

**இன்றின் பிடிக்குள் நாளை**

சத்துணவை
இன்றைய தமிழ்நாடு
சாப்பிடுகின்றது
சத்துணவோ—
நாளைய தமிழ் நாட்டைச்
சாப்பிடுகின்றது.

—கி. அறிவுச் செல்வன்



**காவிரி**

தேசிய முகங்களின்
சாயத்தை
வெளுக்க வைக்கும்
சலவைத்துறை

கவிஞர் ரமணகுமார்

FREE E BOOKS - www.thamizham.net - TM1889 / Dec 2010

# எமக்கு வந்தவை

***வெள்ளை ரோஜா:*** (சமூக நாவல்) ஆசிரியர்: கருணா மனோகரன் கிடைக்குமிடம்: ராசிக் பதிப்பகம், கேம்பலாபாத்—628614, விலை: ரூ 4.00.

***பலியாடுகள்:*** (சீன மொழி பெயர்ப்பு கதை நூல்) தமிழாக்கம்: கே. அ. இலட்சுமி மணாளன்; கிடைக்குமிடம்: பாவேந்தர் நூலகம், 57, விநாயகர் கோயில் வீதி எண் 1, கிருட்டிணாபுரம் (அஞ்சல்) சிங்கா நல்லூர், கோவை—641 005, விலை: ரூ 2.00.

***முத்துக் குவியல்:*** (பொது அறிவுத்தொகுப்பு நூல்) ஆசிரியர்: E. பார்த்த சாரதி, கிடைக்குமிடம்: ஜனோதயம், 122, ஸ்டெர்லிங் சாலை, சென்னை-34,

***இந்த எரிமலை ஒரு நாள் எழுந்திருக்கும்:*** (கவிதைத் தொகுப்பு ஆசிரியர்: தரும. இரத்தின குமார், கிடைக்குமிடம்: 23/8 A, பொம்மை நகர், அனகாபுத்தூர், சென்னை-70, விலை: 75 காசுகள்.

***தமிழ்மகள்:*** (கட்டுரை) ஆசிரியர்: மு. கருணாகரன்; கிடைக்குமிடம்: நம் நாடு பதிப்பகம், 'மேகலா இல்லம்' நேரு காலனி, திருத்தங்கல் சாலை மகளிர் கல்லூரி சமீபம், சிவகாசி விலை: ரூ 1.00.

***இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்?*** ஆசிரியர்: மறை, திருநாவுக்கரசு; கிடைக்குமிடம்: குன்றவாணன் பதிப்பகம், பள்ளி பாளையம், ஈரோடு—638 006, விலை: ரூ 3.00

***வீரகதைகள்-144:*** தொகுத்தவர்: அ. ராஜா சொர்ண சேகர்; கிடைக்குமிடம்: மாமுநி பப்ளிகேஷன்ஸ், 113—ஜி/1, தெற்கு அம்மன் கோவில்பட்டி, சிவகாசி; விலை: ரூ 1.00

***கோவில் கதவு:*** (கவிதை) ஆசிரியர்: பேராசிரியர் ஜி. வில்சன் அமல் ராஜ், திருப்பத்தூர், வட ஆற்காடு, விலை: 25 காசு.

***சௌந்தர்ய சொப்பனங்கள்:*** (கவிதைகளும், வசன கவிதைகளும்) ஆசிரியர்: கவிஞர் தி. வீரபாண்டியன், கிடைக்குமிடம்: வீணை வெளியீடு, பொன்னையன் தெரு, திருத்துறைப் பூண்டி 614 713 விலை: ரூ 6.00.

***இயற்கை வடிவங்கள்:*** (பாட்டரங்கப் பாடல்கள்) ஆசிரியர்: கடலூர் மணிமாறன் க.மு; கிடைக்குமிடம்: கனி மொழி பதிப்பகம், கிருட்டிணராயபுரம்—639 102, திருச்சி மாவட்டம், விலை: ரூ 1.50

***புள்ளி:*** (மாத இதழ்) (தனிச்சுற்றுக்கு மட்டும்) ஆசிரியர்: தீபன், கிடைக்குமிடம்: 43, சுப்ரமணிய தோட்டம், பெரம்பூர், சென்னை-11, விலை: 25 காசு.

## கச(ா)ப்பு டாக்டர்கள்

*காசு மட்டும் குறியாக இருக்கும் சில டாக்டர்கள், மருத்து
வத் தொழிலை, பச்சை வியாபார மாக்கி வருகிறார்கள்.
நான்கு ஐந்து டாக்டர்கள் "பிஸிசியன்," "சர்ஜன்"
"நியூராலஜிஸ்ட்", "ஈ. என். டி" என்று ஒரு உடன் பாடு
வைத்துக் கொள்கிறார்கள். இதில் எந்த ஒருவரை ஒரு நோ-
யாளி சந்தித்து விட்டாலும் அவர் மற்ற மூவரையும் சந்திக்கும்
படி செய்து விடுவார். இதில் இவர்களுக்குள் "உள் கமிஷன்"
உண்டு.*

*அத்துடன் எந்த சிறிய வியாதிக்காக ஒரு டாக்டரிடம்
சென்றாலும் உடனே "எக்ஸ்ரே", இரத்தப் பரிசோதனை,
"ஈ. சி. ஜீ" போன்ற பரிசோதனைகளைச் செய்யும் படி—அது
வும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் செய்ய வேண்டும் அது தான்
நம்பகமாக இருக்கும் என்று அனுப்புகிறார்கள். இந்த இடங்களி
லிருந்து டாக்டர் அனுப்பும் கேசுகளுக்கு கணிசமான கமிஷன்
உண்டு.*

*மருந்துக் கம்பெனிகளுடன் இந்த டாக்டர்கள் வைத்திருக்-
கும் வெளிப்படையானகமிஷன் அக்ரிமென்ட் மட்டமான ஒன்று.*

*இதில் மையல் கொள்ளும் சில டாக்டர்கள் தன்னிடம்
வரும் நோயாளிகளுக்கு அந்தக் கம்பெனி மருந்துகளில் ஏகப்
பட்டதை எழுதிக் கொடுக்க வேண்டியது. ஒரு மாதத்திற்-
கான மருந்தை எழுதிக் கொடுத்து விட்டு ஒரு வாரம் கழித்து
வந்து பார்க்கச் சொல்கிறார்கள். வந்ததும், சிகிச்சையில் எந்த
முன்னேற்றமும் இல்லை என்பதைக் கேட்டுக் கொண்டு
அவ்வளவு மருந்தையும் அப்படியே விட்டு விடச் சொல்லி
விட்டு, வேறு நீண்ட மருந்துப் பட்டியலை எழுதித் தருகிறார்
கள். இவர்களுக்கு 15% கமிஷன் கிடைப்பதற்காக அப்பாவி
நோயாளி பணத்தைக் கரைக்க வேண்டியது.*

*"டாக்டர்" என்பவரை கண்கண்ட தெய்வமாக மதித்து
உயிரையே ஒப்படைத்து அவர் தயவை வேண்டி நிற்கிறான்
நோயாளி. டாக்டரும் வாழ வேண்டியவர் தான். அதற்காக சம்
பாதிக்க வேண்டியது தான். அதற்காக இப்படி நம்பி வந்த
வனைக் கழுத்தறுக்கிறார் போல பணத்திற்கு பணத்தையும்
பிடுங்கி நோயையும் குணப்படுத்தாது விடுவது படு பாதகத்தி
லும் பாதகம்.*

—சுயராஜ்

FREE E BOOKS - www.thamizham.net - TM1889 / Dec 2010




**The caterpillar in the teacup**

'Oh,' said the princess. 'What's this in my tea?' Floating there in her exquisite china teacup was a piece of yellow fluff that had fallen off the bough of a tree. And as she watched spellbound in the wonder of it all, gossamer fine threads of a brilliant lustre magically began to unravel from it.

**Thus began the history of silk as we know it today and as tradition has it.**

From Textool comes another enduring tradition of India's textile world...... quality machinery to turn the wheels of the flourishing textile industry. Fly frames, ring frames, ring doubling frames, cone winders and doubler winders. Machines to see a diversity of textiles through the crucial stages of spinning and winding. Rugged, modern machines from Textool that are running effortlessly in textile mills all over the country and in several parts of the world. The credentials of this premier Indian textile engineering organisation...... over thirty years of an intense involvement with the warp and weft of the Indian textile world.

**Cast into every piece of machinery that Textool manufactures today are the engineering precision and technological excellence that have been built up of a solid experience.**



textool

**Textool Company Limited** Ganapathy Coimbatore 641 006
Grams: TEXTOLCO Telex 855-353 TXT IN Telephone 26231 (5 lines)

## சிறுகதை:

# வெள்ளை யானைகள்

"மற்ற அரசியல் வாதிகளைப் போலில்லை மாணிக்க வாசகம். முற்றிலும் புதுமையானவர்! தானும் தன் கட்சித் தொண்டர்களும் பணக்காரர்களாக என்ன வழி என்று யோசிக்காமல், ஏழைகள் உயர்வதற்கு என்ன வழி என்று தான் திட்டங்கள் வகுக்கிறார். அவர் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து நாட்டுக்குத் தொண்டாற்ற வேண்டும்!" என்று பிறந்த நாள் வாழ்த்துக் கூறி அமர்ந்தார் விழாத் தலைவர்.

சர்வ கட்சியைச் சேர்ந்தவர்களும் வரிசையாக வந்து பாராட்டிப் பேசி பொன்னாடை அணிவித்துச் சென்றார்கள்.

மாணிக்க வாசகம் நன்றி கூறுவதற்காக எழுந்தார்.

"எனக்குப் பிறந்த நாள் வாழ்த்துக் கூறிப் பாராட்டியவர்கள் அனைவரும் பொன்னாடை போர்த்தினார்கள். தனி ஒருவனுக்கு இவ்வளவு துண்டுகள் தேவை தானா? ஏழைகளுக்கு நான் இவற்றைக் கொடுக்க விரும்புகின்றேன். நம் நாட்டில் எத்தனை பேர் ஒரே ஒரு கோவணத்தோடு சிரமப் படுகிறார்கள் அவர்களெல்லோரும் அடிப்படைத் தேவைகளைப் பெறுகிற போது தான் எனக்கு மனம் குளிரும்!"

கை தட்டல் ஒலி எதிரொலித்தது.

"எனது லட்சியமே ஏழைகள் பணக்காரர்களாக வேண்டும் என்பது தான். நம் ஊர் சேரியில் உள்ள குப்பனும் சுப்பனும் என்னைப் போலச் சட்டை வேட்டி அணிந்து கொள்ள வேண்டும். என்னைப் போல வேளா வேளைக்குச் சாப்பிட வேண்டும். இதற்காக நான் தீவிரமாகப் பாடுபடுவேன்! என்னைப் போல ஒரு ஏழை சட்டை போட்டுக் கொண்டு வந்தால் அது தான் எனக்குப் பெரும் மகிழ்ச்சி. அந்த நாளைக் கூடிய விரைவில் கண்டே தீருவோம்!" என்று முழங்கி அமர்ந்தார் அவர்.

கை தட்டல் ஒலி நிற்க நெடுநேரமாயிற்று.

மாணிக்க வாசகத்தின் டிரைவர் பொன்னுசாமிக்குப் பெருமை பிடிபடவில்லை. தனது முதலாளியைப் பற்றி மக்கள் பேசிய பேச்சிலேயே மிதந்தான்.

என்றைக்காவது கொஞ்சம் கூடுதலாகப் பணம் கிடைத்தால் முதலாளியின் மகிழ்ச்சிக்காகவாவது கொஞ்சம் விலை

உயர்ந்த சட்டையை வாங்கிப் போட்டுக் கொண்டு அவர் முன்னால் போய் நிற்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.

அடுத்த மாதம் அவன் மாமனாருடைய அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவிற்காக-மாணிக்கவாசகர் செலவில்-ஒரு சட்டை எடுத்து கொள்ளச் சென்றவன், [illegible] விலை உயர்ந்த சட்டைத் துணியை விலைக்கு வாங்கினான்.

அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவுக்கு மாணிக்க வாசகத்தை அழைத்துச் செல்வதற்காக வந்தவன் அந்தச் சட்டையைப் போட்டுக் கொண்டு வந்தான்.

தன் புதுச் சட்டையைப் பார்த்ததும் முதலாளி முகத்தில் எவ்வளவு மகிழ்ச்சி மலரும் என்பதைக் காணக் காத்திருந்தான்.

என்ன ஆச்சரியம்! அன்றைக்கு அவரும் அதே மாதிரிச் சட்டையோடு உட்கார்ந்து பெரியவர்களுடன் பேசிக் கொண்டிருந்தார்.

[illegible]கட்சி எம்.எல்.ஏ ஒருவர் இருவரின் சட்டைகளையும் 'ஒரு [illegible]யாக' மாறி மாறிப் பார்த்தார்.

[illegible] சென்றனர். மாணிக்க வாசகம் உள்ளே சென்றார்.

"அடியே செங்கமலம்! வாடி இங்கே! பாத்தியாடி அங்கே! நம்ம டிரைவர் போட்டிருக்க சட்டையை!"

"அடியாத்தீ! இதென்னங்க அதிசயமா இருக்கு! ரெண்டு பேரும் ஒரே மாதிரி போட்டிருக்கீங்க!"

"இதை யாரு வாங்கியாந்தா? நீதானே?"

"நான் தான் வாங்கியாந்தேன். அதுக்கென்ன? கடைக்காரன் இதுதான் இப்ப பேசன்னான். வாங்கியாந்தேன். நீங்க தானே சொன்னீங்க, உங்களை மாதிரியே குப்பனும் சுப்பனும் சட்டை போட்டுக் கிட்டா ரொம்ப மகிழ்ச்சியா இருக்குமுன்னு! சந்தோஷமா போயிட்டு வாங்க!"

"என்னடி கேலியா பண்றே?"

"என்னங்க இது. உங்க அளவுக்கு ஏழை டிரைவர் உயர்ந்திருக்கான்கிறது உங்களுக்கு மகிழ்ச்சியில்லையா?"

"நீ எடுத்தாந்த சட்டையாலே, நான் டிரைவர் நிலைமைக்குத் தாழ்ந்து போயிட்டேன்டி! இனி ரிக்ஷாக் காரன் போடுற மாதிரி சட்டை எடுத்தா. போட்டுக்குறேன். ஏன்டி இப்படி என்னைக் கேவலப்படுத்துறே?" என்று போட்டிருந்த சட்டை

# நமது புளியம்பழ மருத்துவம்

☐ புளி இரத்தத்தை சுண்ட வைக்கும் என்பது ஒரு மூட நம்பிக்கை. இரத்தத்தை முறிக்க கூடிய கொடிய சத்து எதும் புளியில் இல்லை.

☐ எந்தக் காரணத்தால் குமட்டல் வாந்தி ஏற்பட்டாலும், புளியை வாயில் போட்டு சப்பி நீரை விழுங்கினால் வாந்தி நிற்கும்.

☐ அடிபட்டு இரத்தக் கட்டு ஏற்பட்டால், புளியும் உப்பும் கலந்து குழம்பு போல் கரைத்து வடிகட்டி, அடுப்பில் வைத்து தாளக் கூடிய சூட்டுடன் பற்று போட்டால் இரத்தக் கட்டு கரைந்து விடும்.

☐ தேள் கடிக்கு புளி மருந்து. சுத்தமான புளியோடு, சம அளவு தூய ஈர சுண்ணாம்பை பிசைந்தால், சூடாக இருக்கும், இதனை தேள் கொட்டிய இடத்தில் வைத்து அழுத்திய சில நிமிடங்களில் சதையில் ஒட்டிக் கொள்ளும். விஷம் கலவையில் ஏறும். கடுப்பு நிற்கும்.

☐ எதிர் வீக்கம், பல் வலி இவற்றிற்கு புளியங்கொட்டையளவு புளியும் அதே அளவு உப்பும் கலந்து வலியுள்ள இடத்தில் வைத்திருந்தால் உமிழ் நீர் சுரக்கும். உமிழ் நீரைத் துப்பி விட வேண்டும். 10 நிமிடம் கழித்து அடக்கிய புளியை துப்பி வெந்நீரால் வாய் கொப்பளிக்க வலி முறியும், மூன்று வேளை செய்தால் பூரண குணமாகும்.

☐ உடலுக்கு அதிக உஷ்ணம் தர, தலை சம்மந்தமான வியாதிகளைக் குணப்படுத்தி, வாத சம்மந்த நோய்களைக் கண்டிகக புளி, புலியாகச் செயல்படும்.

☐ 2½ ரூபாயெடை புளியம் பழத்தில் உள்ள உயிர்ச்சத்துக்கள்: வைட்டமின் எ—28 மி.கி பி—17 மி.கி, சி—1 மி.கி, சுண்ணாம்புச்சத்து—48மி.கி, இரும்புச்சத்து—48மி. கி. வெப்ப அளவு—82 காலரி.

—சித்தன்

யைக் கழற்றிச் சுக்குச் சுககாகக் கிழித்தார்.

ஹாலில் பிறந்த நாள் விழா டேப் ஒலித்துக் கொண்டிருந்தது.

"மற்ற அரசியல் வாதிகளைப் போலில்லை மாணிக்க வாசகம். முற்றிலும் புதுமையானவர்!"

—வ, தேனப்பன்

FREE E BOOKS - www.thamizham.net - TM1889 / Dec 2010

"குமுறும் நெஞ்சம்" மாத இதழைப் பற்றி எழுதுவதாக சுட்டியில் அறிவிப்பு வந்தவுடன் சில வாசக நண்பர்கள், கிறித்துவ மத ஸ்தாபனம் ஒன்றின் பின்னணியிலிருந்து வெளிவரும் "குமுறும் நெஞ்சம்" ஏடு எப்படி முற்போக்கு இதழாக இருக்க முடியும் என்று ஆவேசமாக கண்டனம் தெரிவித்தார்கள்.

"கிறிஸ்துவே எல்லாவற்றிற்கும் பதில்" என்று இலட்சக் கணக்கான ரூபாய்கள் செலவில் விளம்பர சுவரொட்டிகளும், துண்டறிக்கைகளும், அற்புத சுகம் அளிக்கும் ஆராதனைக் கூட்டங்களும், பேரின்பப் பெரு விழாக்களும் போட்டு மத விளம்பரங்கள் ஒரு பக்கம் நடக்கின்றன. அதே நேரத்தில் தன்னை நேசிப்பதைப் போல அயலானை நேசி" என்று சொன்னவர் கருத்தைப் பரப்ப வந்தவர்கள், தன்னைச் சுற்றியிருக்கிற மனிதர்களின் வறுமையும், நோயும், சுரண்டலும், அறியாமையும், பீடிக்கக் கண்டும் எப்படிக் குமுறாமலிருக்க முடிகிறது?

"ஊசித் துவாரத்தில் ஒட்டகங் கூட நுழையலாம் ஆனால் பணக்காரர்கள் மோட்சத்தில் நுழைய முடியாது" என்று பிரச்

# குமுறும் நெஞ்சம்

சாரம் செய்தவர் இந்தச் சூழலில் இந்த நாட்டில் பிறந்திருந்தால் முதலாளித்துவத்தின் எதிர் முகாமில் தான் போராடியிருப்பார்.

இதே பார்வையுடன் "குமுறும் நெஞ்சம்," திருச்சி புனித சூசையப்பர் கல்லூரி வளாகத்திலிருந்து வந்தாலும், நியாய உணர்வுடன் அந்திகளைக் கண்டு குமுறி கடந்த சுமார் 3½ ஆண்டுகளாக (ஓரிதழும் நிற்காமல்) எல்லா ஆதிக்க, சுரண்டல் முதலாளித்துவ சக்திகளை எதிர்த்துக் குரல் கொடுத்து வருவது தனிப் பாராட்டுக்கு உரியதல்லவா?

இதன் ஆசிரியர் மறைத்திரு வரப்பிரசாதம், ஒரு கால் சென்னை புகழ்மிகு இலயோலா கல்லூரி அதிபராக (Rector) இருந்தவர். பின்னர் தென்னாட்டில் ஏராளமான யேசு சபை நிறுவனங்களைக் கொண்ட மதுரை மறை மாவட்டத்தின் தலைவராக (Provincial) இருந்தவர். அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் நெடிய அறிவு, அனுபவ பயிற்சிகளைப் பல மாதங்கள் பெற்றவர். பல புகழ் வாய்ந்த கல்வி நிலையத் தலைமை பதவியின் உயரத்திலிருந்தவர், சாமானியர்களின் அன்றாடங்காய்சிகளின் அவலத்தைக் கண்டு, தன் உயர்பதவியை விட்டு விலகி மிகக் கீழே இறங்கி வந்து, பாமரர்களுடன் கூடவே (தனி அனுமதி பெற்று) சில நாட்கள் வாழ்ந்து பார்த்தார். அவர்களின் துன்பங்களின் மத்தியில் தன் இருப்பிடத்தை அமைத்துக் கொண்ட இவரை விமர்சனம் செய்த மதவாதிகளுக்கு மத்தியில் இவர் இவர்களின் விடிவைப் பற்றி, தன் சக்திக்குள் செயல்பட முன் வந்தார்.

இதன் ஒரு கட்டம் 1980 ஜனவரியில் தொடங்கப்பட்ட "குமுறும் இதழ்" இது ஒரு "மதச் சார்பற்ற மாத இதழ், மனிதனை மனிதனாக மதித்து அந்தியின் தளைகளை அறுத்து புதியதோர் உலகினை அமைக்க இயலும் என்ற நம்பிக்கையில் இந்தியாவைக் கண்ணோட்டம் செய்யும் இதழ்" என்று பிரகடனப்படுத்திக் கொண்டுள்ளபடி செயல் பட்டும் வருகிறது.

எந்த மசாலா பத்திரிகையும் கவலைப்பட்டு எழுதாத "அஸ்ஸாம் பிரச்சனை"யை நம் தமிழ் வாசகர்களுக்குப் புரியும் எளிமையுடன் எழுதப்பட்ட சென்ற மாத குமுறும் நெஞ்சம் கட்டுரை பாமரர்களுக்கும் தெளிவூட்டியது.



சூசையப்பர் கல்லூரி விடுதிகளிலே நடை பெற்ற சாப்பாட்டுப் போட்டியைத் துணிவுடன் கண்டித்து உணவுப் பஞ்சம் தலை விரித்தாடும் நிலையில் கால் வயிறுடன் உறங்குவோர் கோடிக் கணக்கில் இருக்கையில், 46 இட்லிகளை 50 நிமிடத்தில் ஒருவர் உண்டு களிப்பூட்டும் மனித உணர்வற்றத் தன்மையை நடு நிலைமையுடன் அஞ்சாமல் எழுதியது.

வெள்ளைக் காரர்களின் மந்தத் தனத்தைக் கண்டு இப்படிக் குமுறுகிறது. இக்கட்டுரை "நமது நாட்டில் இப்போது நிலவும் வறுமையை விடக் கொடியது ஒன்று உண்டு. அது நடுத்தர மேல் மட்ட வாழ்வில் இருப்போர் மனிதத் துன்பத்தைக் கண்டும் காணாமல் தங்கள் இதயங்களைக் கடிமைப் படுத்திக் கொள்வதேயாகும்.

பத்திரிகைப் பணியோடு 'குமுறும் நெஞ்சம்' படிப்பகமும், சமூகப் பிரச்சனைகள் பற்றிய விவாத அரங்குகளும் நடத்தப்பட்டு வருகின்றன. வாசகர்களின் குமுறும் நெஞ்ச அனுபவங்களும் இதழ் தோறும் இடம் பெறுகின்றன.

FREE E BOOKS - www.thamizham.net - TM1889 / Dec 2010

'நடிகையின் சுண்டு விரல் நகத்தின் நீளம் எவ்வளவு" என்று புதிர் போடும் சாக்கடை பத்திரிகைகள் மத்தியில் குமுறும் நெஞ்சம் அரசியல் அறிவூட்டும், சமூக சிந்தனையூட்டும் புதிர்களை வெளியிடுவது வித்தியாசமானது.

சில மணி நேரங்கள் வெளி நாட்டு நகரங்களில் தங்கி விட்டு, அங்குள்ள இரவு வாழ்க்கையை தனிக் கவனத்துடன் வெளிச்சப் போட்டுக் காட்டும் பயணக் கட்டுரைகள் வெளி வரும் பாமர சூழலில், 'குமுறும் நெஞ்சம்' ஆசிரியர் ஆப்பிரிக்க கண்டத்து தான்சானியா நாட்டில் ஒரு திங்கள் பயணம் செய்து தொடராக எழுதிய கட்டுரைகள் (பின்னர் புத்தக வடிவம்) முற்றிலும் புதிய அரசியல் பார்வையுடையவை. "ஆப்பிரிக்க மகாத்மா எனப்படும் தான்சானியாவின் தனித்தலைவர் 'ஜூலியஸ் நியரெரெ'யின் உஜமா சோஷலிசம், தன் சார்பு உணர்வோடு வளமான விடியலை அடைந்து வரும் அந்நாட்டின் எழுச்சியை விளக்குகிறது. புதிய வழிகாலை நம்மையும் சிந்திக்க வைக்கிறது.

நமது நாட்டில் வெறும் கூத்தாக மாறிக் கொண்டிருக்கும் இப்போதைய தேர்தல் முறைகளுக்குப் பதிலாக (பெரிய குளம் தேர்தல் எதிரொலி) இதன் ஆசிரியர் கட்சிகளற்ற தேர்தல் முறையைப் பரிந்துரைக்கிறார். நடைமுறையா? என்பது சிந்தனைக்குரியதே. (சர்க்கஸ் முடிஞ்சு போச்சு...அக் 82)

தெரிந்தோ தெரியாமலோ சில பிற்போக்குத்தனங்களை இவ்விதழ் ஆதரித்து வெளியிட்டு வழுக்கி விழுகிறது. அப்போது இவ்விதழின் கூர்மையான வாசகர்கள் இவற்றைத் திருத்தி கண்டித்து எழுதுகிறார்கள். அதனையும் தயங்காது வெளியிட்டு (எ-டு வாசகர் கௌதமன் கடிதம். ஜூலை 81) உண்மையை உணர்வது ஆரோக்கியமானதாகும்.

நிறைந்த புள்ளி விவரங்களும், தேடி எடுக்கப்பட்ட சிந்தனைக்குரிய அரசியல் துணுக்குகளும், தெளிவூட்டும் சமூக உணர்வுள்ள கட்டுரைகளும் இவ்விதழினைப் பழைய பேப்பர் கடைக்கு போட வைக்காது, பாதுகாக்கச் செய்யும்.

—எழில்

ஆண்டு சந்தா ரூ 7-00,
'குமுறும் நெஞ்சம்' புனித சூசையப்பர் கல்லூரி சாலை,
திருச்சி-620002,

(அடுத்து: அறிவியக்கம்

நோபல் பரிசுக் குழுவினர் தவறு செய்வதாக உலகின் பெரிய விஞ்ஞானிகளில் ஒருவரான ஐன்ஸ்டீன் போன்றவர்களே குற்றம் கூறியிருக்கிறார்கள்.

நோபல் பரிசு பெற்றவர்களில் சிலர் சோஷலிஸத்திற்கு ஆதரவாக பேசிவிட்டார்கள் என்பதால், பரிசுக்கு சிபாரிசு செய்யப்படுபவர்களின் பூர்வாசிரமத்தை துப்பு துலக்க வேண்டும் என்று பரிசுக்குழு முடிவு செய்துள்ளது. இதன் படி எவ்வளவு பெரிய விஞ்ஞானியாக இருந்தாலும், உலகம் போற்றும் இலக்கியம் படைத்திருந்தாலும் கம்யூனிஸ்ட்களும், சோஷலிஸ்ட்களும் இப்பரிசு பெற லாயக்கற்றவர்கள்.

உலக சமாதானத்துக்காக பாடுபட்டவர்களாக உலகெங்கும் அறியப்பட்ட காந்தீ, நேரு, போன்றவர்களின் பெயர்கள் பரிசுக்காக சிபாரிசு கூட செய்யப்படவில்லை. ஆனால் உலக சமாதானத்திற்கு உலை வைத்த வியட்நாம் போரை முடுக்கிய கிஸிங்கருக்கு (உலக சமாதானப்) பரிசு வழங்கப்பட்டது.




அலென்டே, சார்த்ரே போன்றவர்கள் நோபல் பரிசை மறுத்து விட்டனர்.

கார்க்கி, செகால், தாஸ்தயேவ்ஸ்கி போன்றவர்களுக்கு நோபல் பரிசு மறுக்கப்பட்டது.


நோபல் பரிசு பெற்ற நூலான டாக்டர் ஷிவாகோவை எழுதிய போரிஸ் பாஸ்டர்நாக், நோபல் பரிசு பெறும் அளவுக்கு மோசமான எழுத்தாளனாகி விட்டேனே, என்று மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டார்.

இந்நிலையில் ஜெயலலிதா சொல்கிறார்:—

இலவச சத்துணவு திட்டத்தை அமுல் படுத்தி வருவதற்காக தமிழக முதல்வர் எம். ஜீ. ஆர் அவர்களுக்கு நோபல் பரிசு கொடுத்திருக்க வேண்டும். இன்னமும் கொடுபடாமல் இருப்பதை நினைத்தால் வருத்தமாக இருக்கிறது.

(நன்றி:— யூத்ஸ் வியூஸ்: எம். ஜி: சுரேஷ்)

FREE E BOOKS - www.thamizham.net - TM1889 / Dec 2010




# காரல் மார்க்ஸ்

☐ உயிர் இனங்களின் பரிணாம வளர்ச்சி நியதியை டார்வின் கண்டுபிடித்தது போல, மனித வரலாற்று வளர்ச்சி நியதியை மார்க்ஸ் கண்டு பிடித்தார். அவர் ஒரு தலை சிறந்த சமூக விஞ்ஞானி என்பதில் இரு கருத்து இல்லை.

☐ இந்த விஞ்ஞான சோஷலிசத் தந்தை இறந்து போய் 100 ஆண்டுகள் ஆனதை சோஷலிச நாடுகள் மட்டுமின்றி உலகெங்குமுள்ள இடது சாரி சக்திகள் கொண்டாடுகின்றன. நமது இந்திய பாராளுமன்றமும் கடந்த மாதம் அவருக்கு அஞ்சலி செலுத்தியது.

☐ ஜெர்மனியில் டிரியர் நகரில் 5-5-1818 ஆண்டு பிறந்தார். சட்டம் பயின்றார். பத்திரிகை ஆசிரியராகப் புகுந்தார். படிப்படியாக பொருள் முதல் வாதியாக வளர்ந்து புரட்சியாளராய்த் திகழ்ந்தார்.

☐ ஜெர்மானிய தத்துவ ஞானத்தையும், ஆங்கிலேய அரசியல் பொருளாதாரத்தையும், பிரஞ்சு சோஷலிசத்தையும் செழுமைபடுத்தி அவற்றை இணைத்து வளைத்தார். இதுவே விஞ்ஞான சோஷலிசமாய்-மார்க்சியமாய் மலர்ந்தது.

☐ மார்க்ஸ் பிரஷ்ய நாட்டு அமைச்சரின் தங்கை ஜென்னியைக் காதலித்து 7 ஆண்டுகள் காத்திருந்து கரம் பிடித்தார். வசதியான குடும்பத்தில் பிறந்தும் வறுமையில் வாடினார். ஆட்சியாளர்களால் வேட்டையாடப் பட்டார். நாடு விட்டு நாடு துரத்தப்பட்டார். சொந்தக் குழந்தை வறுமை நோயால் இறந்தது மட்டுமல்ல; சவ அடக்கத்திற்குக் கூட வசதியின்றி தவித்தார். வையத்தின் சுபிட்சத்திற்காக தன்னையே அர்ப்பணித்துக் கொண்டார். 40 ஆண்டு காலம் உழைத்து "மூலதனம்" என்ற நூலை எழுதினார். அவரே குறிப்பிட்டதைப் போல மூலதனத்திற்குத் தரப்பட்ட ஊதியம் அது எழுதிய போது பிடித்த சுருட்டுக்குக் கூட போதவில்லை.

☐ மார்க்ஸ் மறைந்த நூற்றாண்டுகளில் பூபாகத்தின் மூன்றிலொரு பங்கை அவரின் தத்துவம் சமப்படுத்தியுள்ளதே இவருக்கு கிடைத்த சரியான அஞ்சலியாகும்.

—டி. எஸ். ரவீந்திரநாதன்

FREE E BOOKS - www.thamizham.net - TM1889 / Dec 2010

## சுட்டி முன் இதழ்களைப் படிக்கத்தவறி விட்டீர்களா?

ஒவ்வொரு இதழும் உங்களை விழிப்பூட்டும்-அறிவூட்டும். சரியாக பிரச்சனைகளைப் பார்க்கத் துணை புரியும். முன் இதழ்களை சேமியுங்கள், படிக்காதவர்களுக்கு வழங்கி பயன்படுத்துங்கள். தற்போது இதழ் எண்: 7 முதல் 25 வரை மட்டுமே கைவசம் உள்ளன. பெற விரும்புவோர் இதழுக்கு 25 காசு வீதம் அஞ்சல் தலைகள் அல்லது பணவிடை (M.O.) அனுப்பினால் எங்கள் செலவில் அவை உங்களை அடையும்.

## 'சுட்டி'யை இலவசமாக அறிமுகப் படுத்துங்கள்

'சுட்டி'யைக் கேள்விப்படாத நண்பர்கள் உங்களுக்கு இருக்கிறார்களா? அவர்களுக்குப் படிக்கக் கொடுத்து அறிமுகப்படுத்த விருப்பமா? சுட்டியை நிச்சயம் வரவேற்கக் கூடியவரா?

அப்படியானால் அவர்கள் முகவரியை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். எங்கள் செலவில் இலவசமாக ஒரு மாதிரியிதழ் அனுப்புகிறோம். அஞ்சலட்டையில் மாதிரி இதழ் எனக்குறிப்பிடவும்.

ஒருவர் எவ்வளவு நண்பர்கள் முகவரி வேண்டுமானாலும் அனுப்பலாம்.



## எங்கள் தலைவர்கள்

எங்கள் தலைவர்கள்
இறப்பதே கிடையாது
ஏனென்றால்
முன்பு......
தெருத்தெருவாய் சுற்றினார்கள்
இப்போது
தெருத்தெருவாய் நிற்கிறார்கள்.

—நன்றி. குடிசை

<u>**சுட்டி விற்பனையாளர்கள்**</u> அதிகாரப்பூர்வமாக கீழ்க்கண்ட இடங்களில் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர். <u>இந்த இடங்கள் தவிர பிற இடங்களிலிருந்து</u> விற்பனை செய்ய ஆர்வமுடையவர்கள் விண்ணப்பிக்கலாம்:-

<u>*சென்னை:*</u> நகரம் முழுவதும்.
<u>*செங்கல்பட்டு மாவட்டம்:*</u> காஞ்சிபுரம், திருவள்ளூர், வண்டலூர், போரூர்.
<u>*வட ஆற்காடு மாவட்டம்:*</u> திருப்பத்தூர், ஆரணி, அம்மூர், ரெட்டியூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, குடியேற்றம், போளூர், வேலூர்
<u>*தென் ஆற்காடு மாவட்டம்:*</u> விழுப்புரம், கடலூர், சிதம்பரம், திருக்கோவிலூர், வடலூர். வளவனூர்,
<u>*தஞ்சை மாவட்டம்:*</u> கும்பகோணம், வேதாரண்யம், தகட்டூர், தஞ்சாவூர், திருவாரூர், மன்னார்குடி, அய்யம்பேட்டை.
<u>*திருச்சி மாவட்டம்:*</u> திருச்சி, கரூர், அரும்பாவூர், வெள்ளியணை
<u>*சேலம் மாவட்டம்:*</u> சேலம், சீத்தாராம்பாளையம், நாமக்கல் ஜலகண்டாபுரம். சங்ககிரி வேலூர்
<u>*பெரியார் மாவட்டம்:*</u> கொடுமுடி, குமாரபாளையம்.
<u>*தர்மபுரி மாவட்டம்:*</u> ஊத்தங்கரை.
<u>*நீலகிரி மாவட்டம்:*</u> ஊட்டி, கோத்தகிரி, கிஹாங்.
<u>*கோவை மாவட்டம்:*</u> கோயம்பத்தூர், அவனாசி பீளமேடு, பொள்ளாச்சி திருப்பூர், உடுமலைப்பேட்டை, வி.ஜி. புதூர், சூலூர், சேயூர், காரமடை, நெகமம், மின்பாறை, வால்பாறை, குப்புசாமி நாயுடுபுரம், சின்னியம்பாளையம், கம்பியாம்பாளையம், பெதப்பம்பட்டி
<u>*மதுரை மாவட்டம்:*</u> மதுரை, திண்டுக்கல், தேனி, தென்கரை
<u>*புதுக்கோட்டை மாவட்டம்:*</u> உலகன்பட்டி.
<u>*இராமநாதபுரம் மாவட்டம்:*</u> இராமநாதபுரம், காரைக்குடி, சாத்தூர். இராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், மானாமதுரை.
<u>*திருநெல்வேலி மாவட்டம்:*</u> திருநெல்வேலி, தூத்துக்குடி, கோவில்பட்டி, இராதாபுரம், ஆத்தூர், குருக்குச்சாலை, புதியம்பத்தூர், ஏரல் எப்போதும் வென்றார். கரிவலம்வந்த நல்லூர், சங்கரன் கோவில்,
<u>*கன்னியாகுமரி மாவட்டம்:*</u> நாகர்கோவில், மார்த்தாண்டம், குழித்துறை
<u>*வெளி மாநிலங்கள்:*</u> பெங்களூர், பம்பாய்.

- சுட்டி ஒவ்வொரு மாதமும். **முதல் தேதி** வெளிவரும்.
- 12 இதழ்கள் அஞ்சலில் பெற சந்தா ரூ 5-00
- தனிப்பிரதி 50 காசு
- எல்லாத் தொடர்புகளுக்கும்:—

ஆசிரியர் குழு, 'சுட்டி'
1494, அண்ணா நகர், சென்னை-600 040

FREE E BOOKS - www.thamizham.net - TM1889 / Dec 2010





ஆசிரியர்: நிர்மலா சுந்தர், வெளியிடுபவர்: பொ. இரத்தினம், 1494, அண்ணா நகர், சென்னை-600 040, அச்சிடுவோர்: J. S. கிட்டோஜி ஷா, இந்தியா பிரிண்டர்ஸ், 35 மப்பை தெரு, சென்னை-600 002.

FREE E BOOKS - www.thamizham.net - TM1889 / Dec 2010

ஒட்டு : மலர் இதழ் 1, ஜூலை 1983 Regd. No. TN/MS(N)/317
Licensed to post without prepayment Licence No. TN/MS(N)WPP-56

1889 / Dec 2010
http://www.thamizham.net
FREE E BOOKS



# Sakthi Sugars Limited

## A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarcane production with innovative technology and the farmers have achieved a successive increase in yield of sugarcane to 45 tonnes from 28 tonnes to earn an additional income of Rs. 3,000/-Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distributing over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousand farmers (a bulk of Whom are small and marginal farmers) and generating gainful rural employment to over fifty thousand families in the primary, secondary and tertiarey sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development programmes (I) Sakthi High School Provides a conducive environment for study and development of rural children. (II) Sakthi Institute of Technology promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasam Hospital provides medical care for the region.

Head Office:
73-A, Race Course Road,
Coimbatore-641 018.

Reg. Office & Factory:
Sakthinagar-638 315.
Periyar Dist.

FREE E BOOKS - www.thamizham.net - TM1889 / Dec 2010